Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 10-11-1945 ஐப்பசி மீ 25உ { மலர் 5

## சீதையைப்பற்றிய ஒரு நடுநிலைமை ஆராய்ச்சி

( மணி )

வால்மீகி தனது ராமாயணம் என்னும் காவியத்தில் சீதையை ஒரு கற்புள்ள உயர்குணப் பெண்ணாக சித்தரிக்கவேண்டும் என்று கருதி இருந்திருக்கிறாரா? அல்லது சீதையை காம உணர்ச்சிக் காதல் கொண்ட ஒரு சாதாரணப் பெண்ணாக சித்தரிக்கவேண்டும் என்று கருதி இருந்திருக்கிறாரா என்பது இந்த ஆராய்ச்சியின் கருத்தாகும்.

இதில் எடுத்துக் காட்டப்படும் விஷயங்கள் எல்லாம் வால்மீகி இராமாயணத்தில் உள்ளவைகளேயாகும்.

1. சீதையின் பிறப்பு வால்மீகியால் இழித்துரைக்கப்பட்டிருக்கிறது.

(அ) சீதை யாராலோ எப்படியோ பெற்று, கட்டாந்தரையில் போட்டு, புழுதியினால் மூடப்பட்டுக் கிடந்திருக்கிறாள்.

(ஆ) இதனால் சீதையை அவள் பக்குவமடைந்து வெகுநாள் வரையிலும் யாரும் மணக்க, வரவில்லை.

(இ) வளர்த்த தந்தை இதற்கு ஆக வருந்தி இருக்கிறார்.

இந்த சங்கதியை வால்மீகி சீதையின் வாய்மொழியாகவே ஆரண்ய காண்டத்தில் ரிஷி ஆஸ்ரமத்தில் ரிஷியின் மனைவிக்குச் சீதையே சொன்னதுபோல் சித்தரித்து இருக்கிறார்.

2. சீதையின் குணத்தில் பரதன் அதிருப்திப் பட்டதாகவும் சீதையை பரதன் வெறுத்திருப்பதாகவும் சித்தரித்து இருக்கிறார்.

இதையும் வால்மீகி சீதையின் வாய்மொழியாகவே அயோத்தியா காண்டத்தில் ராமன் வனம் செல்லும்போது, சீதையை தன்னுடன் கூட வனத்திற்கு வரவேண்டாம் என்றும், தான் திரும்பி வரும் வரை பரதனிடத்தில் அவனுக்கு நல்லவளாய் நடந்து கொண்டு இரு; அதனால் நமக்கு லாபம் கிடைக்குமென்றும் சொன்னதற்குப் பதிலாக என்னை வெறுக்கும் பரதனிடத்தில் நான் இருக்கமாட்டேன், என்பதாகச் சீதைசொன்னதாகவும், இங்கு உள்ள நாள் எல்லாம் நம்மை அனுபவித்துவிட்டு காட்டுக்குப் போகும்போது நம்மைத் தள்ளப் பார்க்கிறான், என்றும் காட்டில் இராமனின் அழகைக் கண்டு வேறு பெண்கள் மோகித்து வசப்படுத்திக்கொண்டால் நம்பாடு திண்டாட்டமாய்ப் போய்விடுமே என்றும், எண்ணியதாகவும் சித்தரிக்கிறார்.

அன்றியும் சீதையைப் பார்த்து இராமன் "நீ பரதனால் பாராட்டத் தக்கவள் அல்ல" என்று இராமன் வாயால் சொன்னதாக சித்தரித்து இருக்கிறார்.

லட்சுமணன் வாயாலும், சீதையை ஒரு சாதாரணப் பெண் என்றும், சீதை கெட்ட நடத்தை உள்ளவள் என்றும் ஆரண்ய காண்டத்தில் சித்தரித்து இருக்கிறார்.

சீதையை அவள் வாய்ப்பேச்சாலேயே "தன் மனைவியைப் பிறருக்குக் கூட்டிக்கொடுக்கும் கூத்தாடிபோல் என்னைப் பரதனுக்கு விட்டு லாபம் அடையப் போகிறாய்-பேடியே ஆண்மையற்றவனே" என்றும், அற்பன் என்றும் கூடத் தன் கணவனைக் கேட்டதாக அயோத்தியா காண்டத்தில் சித்தரித்து இருக்கிறார்.

கணவன் சீதையை உன் நகைகளை எல்லாம் கழற்றி வைத்துவிட்டு வா என்று சொல்லியும் ஒரு தடவை கழற்றிவிட்டு மறுபடியும் போட்டுக்கொண்டே, காட்டுக்குப் போனதாகச் சித்தரிக்கிறார்.

கணவன் பல தடவை சொல்லியும் மரஉரிதரிக்காமலே காட்டுக்குப் போனதாகச் சித்தரிக்கிறார்.

சீதையின் கற்பைப் பற்றிக் கணவன் சந்தேகித்ததாக சீதை வாயாலேயே சித்தரிக்கிறார்.

அது உண்மை என்று கருதும்படியாகவே இராமன் வாயாலும் நான் உன்னைச் சோதித்துப் பார்த்தேன் என்று சொன்னதாக அயோத்தியா காண்டத்தில் சித்தரிக்கிறார்.

மற்றும் பல இடங்களிலும் சீதை கற்பில் சந்தேகப்பட்டதாக இராமன் வாயால் சொன்னதாகச் சித்தரிக்கிறார்.

சீதை தனது மதிப்புக்குரிய கொழுநன் லக்ஷ்மணனை, அவனது நல்ல எண்ணத்தையும் அவன் செய்த சேவையையும் சிறிதும் அறியாமலும் நன்றி இல்லாமலும் தன்மேல் லட்சுமணன் ஆசைப்பட்டு, தன்னை அடைந்து அனுபவிக்கக் கருதியதாக வெளியில் சொல்லி, ஒரு சாதாரண இழிகுலப் பெண் நடந்து கொள்ளும் குணம் பேச்சுப் போல் சீதை வாயாலேயே எடுத்துக்காட்டி சித்தரிக்கிறார்.

(தொடரும்)

# திராவிடர் கழகங்கள்

பழனி திராவிடர் கழக சார்பில் 13-10-45-ல் தோழர் மாரிமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. "இலவச வாசகசாலை" தோன்றுவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

சேலம் பணமரத்துப்பட்டி திராவிட வாலிபர் சங்க சார்பில் 21-10-45-ல் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் அய்யம்பெருமாள் தலைமை வகித்து தோழர்களான பி. கே. பெருமாள், எ கணபதி எம். பி. சுப்ரமணியம் ஆகியோர் பேசினர்.

பட்டுக்கோட்டை திராவிடர் கழக அங்கத்தினர் தோழர் எஸ். பாலகிருஷ்ணன் திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க, தாம் இதுகாறும் வகித்துவந்த கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவியையும் டிவிஷனல் யுத்தக் கமிட்டி மெம்பர் பதவியையும் ராஜிநாமா செய்ததைப் பாராட்டு முகத்தான் பட்டுக்கோட்டை திராவிடர் கழகத்தினரால் ஒரு தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் சிறப்பாக நடைபெற்று தோழர்கள் காளியப்பன், எம். முகம்மது மீரா, பி. சாமுவேல், என். விசுவநாதன், கே. எஸ். சிவராம கிருஷ்ணன், எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

5-10-45-ல் பட்டுக்கோட்டை திராவிடர் கழக சார்பில் நடந்த கூட்டத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விரிவுரையாற்றினார்கள். தோழர் கே. வி. அழகிரிசாமி திராவிடர் கடமை என்பது பற்றிப் பேசினார். பாரதிதாசன் அவர்கட்கு சு. ம. சங்கம், திராவிடர் கழகம், மருத்துவர் சங்கம், ஹனிபா முதலியோரால் வாழ்த்துப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன.

18-10-45 பட்டுக்கோட்டை திராவிடர் கழக சார்பில் தோழர் ஆர். சாமிநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் எச். பி. காளியப்பன், எஸ். கருணானந்தம், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

ஆத்தங்குடி திராவிடர் கழகத்தின் சார்பில் ஊருணிக்கரையில் 28-10-45 ஞாயிறன்று நடந்த மாபெருங்கூட்டத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சொற்பொழிவாற்றினார்.

கணியூரில் 21-10-45 ஞாயிறு மாலை 8மணிக்கு பண்டிதர் மு. வெங்கடாசலம் தலைமையில் நடந்த பெருருங் கூட்டத்தில் தோழர்கள் அங்கமுத்து, அப்துல் லத்தீப், கே.எ. மதியழகன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள்.

சின்னாள்பட்டி திராவிடர் கழக சார்பில் 28-10-45 ஞாயிறு காலையில் பஞ்சாயத்துபோர்டு பிரசிடெண்டு தோழர் பி. எஸ். கே. ராஜய்யாவுக்கு ஒரு உபசாரப் பத்திரம் அளிக்கப்பட்டது. பகல் 12 மணிக்கு திராவிடர் கழக கமிட்டிக் கூட்டம் தோழர் ராமசாமி தலைமையில் நடைபெற்றது.

கல்வார்பட்டியில் 24-10-45 இரவு தோழர் மண்மாரி வீரப்பன் தலைமையில் ஆசிரியர் இன்ப அரசனைப் பாராட்டி ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

21-10-45 காலை 9 மணிக்கு விருத்தாசலம் திராவிடர் கழக நிலையத்தில் தோழர் இராவணன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் ஆ. திராவிடமணி பி. எ., வீரமணி ஆகியோர் பேசினர். பொன்னரசன் நன்றி கூறினார்.

21-10-45 மாலை 4 மணிக்கு திருப்பாபுலியூர் திராவிட இளைஞர் கழகத்தில் தோழர் நமசிவாயம் தலைமையில் திருச்சி தீர்மானங்களை விளக்கி தோழர்கள் திராவிடமணி, வீரமணி, கணேசன், குப்புசாமி ஆகியோர் பேசினார்கள். தோழர் இராசன் நன்றி கூறினார்.

கடலூர் தோழர் வி. கே. எஸ். சண்முக சுந்தரம் இல்லமாகிய குமாராசா பவனத்தை ஜனாப் உஸ்மான், சாலி முகம்மது சேட் 21-10-45 மாலை 6-மணிக்கு திறந்துவைத்தார்.

தஞ்சையில் 4-11-45 மாலையில் முருகவிலாஸ் மண்டபத்தில் தோழர் கோவிந்தசாமி தலைமையில் திராவிடர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஆர். சுப்பண்ணா, குப்புசாமி ஆகியோர் பேசினர், தஞ்சை ஜில்லா ஹோட்டல் தொழிலாளர் மாநாட்டில் ஜாதி-மத பேதமின்றி சகல மக்களையும் ஹோட்டல்களில் அனுமதிப்பதென்று தீர்மானம் நிறைவேறியமைக்காக மகிழ்ச்சி தெரிவிப்பதாகத் தீர்மானம் நிறைவேறிற்று.

சென்னை திருவல்லிக்கேணி மாவட்டத் திராவிடர் கழக ஆதரவில் 21-10-45 காலை தோழர் அப்பாதுரை எம். எ., எல். டி., தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கே.ஜி. ராதா, செம்பியன், வடிவேலு ஆகியோர் பேசினர். தோழர் செம்மணி இயக்கப் பாட்டுகள் பாடினார். திராவிட அரசு நன்றி கூறினார்.

திருச்சி வரகனேரி அந்தோனியார் கோயில் தெரு திராவிடர் கழக கூட்டம் 16-10-45 மாலைதோழர் தனசாமி தலைமையில் கூடி பெரியார் 67-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் மாணிக்கவாசகம், கபிரியேல் ஆகியோர் பேசினர். திராவிடர் கழக முதலாவது ஆண்டு விழா நடத்த தீர்மானிக்கப்பட்டது.

சிதம்பரம் தாலுக்கா பூந்தோட்டத்தில் 28-10-45 ஞாயிறு மாலை தோழர் தில்லைக் கோவிந்தன் தலைமையில் பெரியார் திடலில் தீபாவளி எதிர்ப்புப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது சிறப்பாக!

தஞ்சை நகர திராவிடர் கழகத்தின் ஆதரவிலும் கரந்தை திராவிட வாலிபர் கழக சார்பிலும் பரிசுத்த நாடார் காம்பவுண்டில் தோழர் சுப்பண்ணா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினார்.

திருச்சி கீழ தேவதானம் திராவிடர் கழக சார்பில் 22-10-45 மாலை 7 மணிக்கு முனிசிபல் பாடசாலைக் கருகில் தோழர் கே. ஆறுமுகம் தலைமையில் திராவிடர் கழக அங்கத்தினரும் பொருள் காப்பாளருமான தோழர் இ. சுப்ரமணியம் 17-10-45ல் இயற்கை எய்தியது குறித்து ஒரு அனுதாபக்கூட்டம் நடைபெற்றது.

அய்யம்பேட்டை திராவிடர் கழக சார்பில் 25-10-45 மாலை தோழர் முத்து தனபால் பி. எ. தலைமையில் பொதுக்கூட்டத்தில் தோழர் முருகையன் கொடியேற்றிவைத்தார். தோழர் ஆறுமுகம் பெரியார்படம் திறந்து வைத்தார். தோழர் இரா. நெடுஞ்செழியன் திராவிடர் நிலை என்பதுபற்றி உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினார்.

சேலம் பொன்னமாப் பேட்டையில் 2-11-45 இரவு 9 மணிக்கு தோழர் சின்னசாமி தலைமையில் நடந்த தீபாவளி எதிர்ப்புக் கூட்டத்தில் மாணவத் தோழர்கள் துரைராசு, சோமசுந்தரம், குழந்தைசாமி மற்றும் பலர் பேசினார்கள்.

மாயவரம் திராவிட மாணவர் கழகக் கூட்டம் 1-11-45-ல் திராவிட கழகக் கட்டிடத்தில் நடைபெற்று வாசக்சாலையொன்று துவக்கத் திட்டம் போடப்பட்டது.

---

திருச்சி ஜில்லா மருத்துவர் சங்க 22-வது ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் 16-10-45-ல் நடைபெற்றது.

# பிரிட்டிஷ்—ஆரிய ஒப்பந்தம் ஒழிக!

## நம்முடைய பெருந்தன்மையை பயங்காளித்தனமாகக் கருதுவதா?

மாலைக்குப்பதில் கறுப்புத்துணிகளைப் போடுங்கள்!

## சேலம் அம்மாபேட்டையில் பெரியார் சொற்பொழிவு

சேலம் அம்மாபேட்டை திராவிடர் கழக ஆண்டு விழா 4-11-45-ந் தேதி ஞாயிறு காலை 9 மணிக்குத் துவக்கப்பட்டது. 2 மைல் தூரம் பெரியதோர் ஊர்வலம் 10000 மக்கள், பல வாத்தியங்கள், புடைசூழ ஊரில் பல பாகங்களின் வழியாகச் சென்றது. வீடுதோறும் பெரியாருக்கு வண்டி மாலைகள் அணிவித்து வாழ்த்தினர்.

பனகால் கழகத்தில் பெரியார் படிப்பகத்தை தோழர் ஜனார்த்தனம் எம். ஏ., அவர்கள் திறந்து வைத்தார். ஊர்வலத்திற்கு தோழர் அ. கந்தசாமி செட்டியார் தலைமை வகித்தார்.

காலை 11 மணிக்கு பெரியார் தலைமையில் ஆண்டுவிழா ஆரம்பமாயிற்றுதோழர்கள் தர்மபுரி நடேசன் முருகேசன் பாடினார்கள். தோழர் மு. கருணாநிதி கொடியேற்று விழா வாற்றினார்.

தியாகர் படத்தை எத்தாப்பூர் தோழர் ஒய். எஸ். அருணாசலமும், திராவிட நாடு படத்தை தோழர் ஏ. பி. ஜனார்த்தனமும், செல்வம் படத்தை சேலம் தோழர் ஆர். நடேசனும், பனகல் படத்தை ஸ்டாலின் கே. ராமசாமியும் திறந்து வைத்தனர். மாலை 6 மணிக்கு டாக்டர் ராஜகோபால் தலைமையில் பொதுக் கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. ரா., தோழர்கள் ஜனார்த்தனம், ஒய். எஸ். அருணாசலம், கருணாநிதி ஆகியோர் பேசினார்கள். ஏராளமான மக்கள் விழாவிற்கு வந்திருந்தனர்.

பெரியார் சொற்பொழிவின் சுருக்கம்

நீதிமான்கள். நல்ல ஆட்சியில் வல்லவர்கள், அறிவாளிகள். ஆனால் அவையெல்லாம் இந்த நாட்டிலல்ல! இங்கிலாந்தில் தான் நேர்மையுடன், சமஉணர்ச்சியுடன் அவர்கள் ஆட்சி நடக்கிறது. இந்தியாவிலோ, அவர்கள் நடத்தும் ஆட்சி தங்கள் சுரண்டலுக்குஆக ஆரியருடன் ஒப்பந்தம் செய்துகொண்டகூட்டுச்சுரண்டல் ஆட்சியாக இருக்கிறதல்லாமல் அநீதி நிறைந்து மிருக்கிறது. ஆகவேதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டுமென்று கூறுவதைவிட "பிரிட்டிஷ் ஆரிய ஒப்பந்த—ஏகாதிபத்தியம் ஒழிக" என்று நாம் கூறுவது பொருத்தமுள்ளதாகும். அவர்களுக்குள் ஒப்பந்தமில்லாவிட்டால், விக்டோரியா சாசனம் வருமா? மனுநீதி, இந்துலா இருக்குமா? "நீங்கள் நடத்திய ஆகஸ்டு கலவரத்தில் நடந்தவைகளை மறந்துவிட்டோம், ராசி பேசுவோம்" என்று ஆரியர்களை ஆங்கிலேயர் கூறி அழைக்கவுமான நிலைமையையும், ஆகஸ்டு கலவரத்தில் ஆரியர் ஆங்கிலேயருக்கு எவ்வித கெடுதியும் செய்யாமல் இந்தியர்களையே துன்புறுத்தியும், கொன்றும், இந்தியர் ஏறிய ரயில்களையே கவிழ்த்தும், இந்தியர் கட்டடங்களையே கொளுத்தி கலகம் செய்ததுமான நிலைமையையும் பார்க்கும்போது அவர்களுக்குள் ஒப்பந்தம் இல்லை என்று யார்தான் சொல்லமுடியும்?

நாமும் ஆகஸ்ட்கலவரத்தில் சேர்ந்திருந்தால்— தண்டவாளங்களைப் பெயர்க்க முனைந்திருந்தால் ஆங்கி...

...செய்துகொள்ள அழைத்திருப்பான்.

ஆனால் நாம் நம்முடைய மக்களின் நலத்திற்காகவும், நாட்டின் பாதுகாப்புக்காகவும், கோடிக் கணக்கான குழந்தைகளையும், பெண்மணிகளையும், அவர்கள் செல்வத்தையும் யுத்தத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றவேண்டுமென்பதற்காகவும், எதிரிகள் நுழைவை தடுப்பதற்காகவும் யுத்த ஆதரவு கொடுத்ததை நமது பயங்காளித்தனம் என்றும், நமது இழிதன்மை என்றும் சர்க்கார் நினைத்துவிட்டார்கள்.

நாம் பாஷையிலே ஈனபாஷைக்காரர்களாகவும், சமுதாயத்தில் இழிமக்கள், சூத்திரர்களாகவும், மதத்தன்மையில் மிலேச்சர்களாகவும், கடவுள் தன்மையில் காட்டுமிராண்டிகளாகவும், அரசியல் வட்டாரத்தில் தகுதியற்றவர்களாகவும், அறிவற்ற பாமரர்களாகவும் அழைக்கப்பட ஆகிவிட்டோம். ஓட்டர் தன்மையில் படிக்காதவர்கள், போதுமான ஓட்டற்றவர்கள் என ஒதுக்கப்பட்டுவிட்டோம். ஆகவே இந்த ஆட்சித் தத்துவம் நம்மை இழிமக்களாக்கி விட்டது.

இந்நாட்டில் யாரும் நம் மக்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. காங்கரஸ்காரர்கள் வெள்ளையரை விரட்டுவதாகப் பாசாங்கு செய்து "ஆசியாவை விட்டு வெளியேறு" என்ற அர்த்தமற்ற கூக்குரலைக் கிளப்புகிறார்கள். இதைப் பார்த்து வெள்ளையன் சிரிக்கிறான். பொதுவுடைமை பேசும் ஆரியர்களோ இயங்...


**WANTED**

**SUB-EDITORS.**

immediately. Must be well up both in English and Tamil. Apply, Stating previous experience, minimum salary required, etc., to

Managing Editor,
"Pudu Ulagam" Weekly,
77 B Harris Road,
Mount Road P.O.,
Madras.

திரத் தொழிலாளர்களையும், மில் தொழிலாளர்களையுமே சேர்த்துக்கொண்டு அவர்களுக்குச் சம்பளம் கூட்டி, சௌக்கியம் செய்து கொடுப்பதாய்ச் சொல்லு கிறார்கள். இவர்கள்தானா தொழிலாளிகள்! இதுதானா பொதுஉடமை? நாட்டிலே சூத்திரர்களாக ஆக்கப்பட்டு உள்ள, நெசவன், உழவன், கூலியன், குயவன், நாவிதன், வண்ணான், பறையன், சக்கிலி என்பன போன்ற தொழிலாளர்களைப்பற்றி— உழைப்பாளிகளைப் பற்றி நினைப்பதும் இல்லை, நினைக்க ஆட்களுமில்லை. நம்மிடையில் புகுத்தப்பட்ட சமுதாய பழக்க வழக்கங்களோ நம்மை மிகமிகத் தாழ்வாக அழுத்திவைத்துள்ளன.

இவைகளை யாரும் சிந்திப்பதில்லை. முதுகில் அரிக்கிறதென்றால் முதுகில் ஒரு கை முளைக்கட்டும் சொரிந்துகொள்ளலாம் என்பதுபோலவே, சுயராஜ்யம் வரட்டும், பொதுவுடமை வரட்டும் என்று ஏய்க்கிறார்கள்.

ஆகவேதான் நம் முன் நிற்கும் வேலை அதிகமென்று கூறுகிறோம். நமக்கு ஓட்டு ஏற்பட்டு நாம் தகுதியுடையவர்களாக ஆகும் வரையில் போலித் தேர்தல் தேவையில்லை. நம் மக்கள் சட்டசபைக்குப் போவதைவிட மான உணர்ச்சி பெற்றுவிட்டால் ஆரிய ஆட்சி மட்டுமல்ல ஆங்கில ஏகாதிபத்தியமும் தானாக ஒழிந்துபடும். உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். நிறைய அவகாசமிருக்கிறது.''

என்பதாகப் பேசியதோடு இன்றைய கூட்டத்தில் ரூ 200க்குமேற்பட்ட மாலைகள் வாங்கி வீண் செய்ததால் இனி மாலை வாங்காமல் மரியாதைகாட்டுவதற்கு கறுப்புத் துணிகள் வாங்கி மாலையாக அணிவித்து நமது இன எழுச்சியையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார். மாலையில் முடிவுரையிலும், பொதுக் கூட்டத்திலும் 3 மணி நேரம் விளக்கிப்பேசினார்.

---

முகவரி:

A. சங்கரய்யா,
''குடி அரசு'' ஆபீஸ்,
[illegible]

## நடக்க இருப்பவை!

● திராவிட மாணவர் மாகாண மாநாட்டின் வரவேற்புக் குழுவின் கூட்டம் பல செய்திகளை முடிவு கட்ட திருச்சியில் 18-11-45 அன்று கூடும் என்று வரவேற்புக் குழு செயலாளர் தோழர் இளம்வழுதி அறிவிக்கிறார்.

● 11-11-45 ஞாயிறு மாலை 6 மணிக்கு திருச்சி டவுன் ஹாலில், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகியவர் சார்பாக மேல் கோர்ட்டுகளில் அப்பீல் செய்யவும், அரசாங்கத்தாருக்கு விண்ணப்பிக்கவும் ஆவன செய்ய தமிழ் மக்கள் கூட்டம் ஒன்று நடைபெறும். அனைவரும் வருக.

● லால்குடி தாலுகா திராவிடர் கழகக் கூட்டம் ஆரம்பிப்பதற்காக லால்குடி செட்டியார் மடத்தில் 21-11-45 மாலை 3 மணிக்கு ஒரு கூட்டம் நடைபெறும் என தோழர் எம். கே. ராமசாமி அழைக்கிறார்.

● 11-11-45 ஞாயிறு மாலை 5 மணிக்கு சுவாமிமலை இளைஞர் இலவச வாசகசாலை மூன்றாவது ஆண்டு விழா தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் நிகழுறும். தோழர் கே. கே. நீலமேகம் கொடியேற்றுவார். தளபதி சி. என். அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார். வருக தோழரே!

● 17-11-45 சனியன்று பிற்பகல் 2 மணிக்கு இராசிபுரம் நயினான் அவர்கள் இல்லத்தில் சேலம் ஷெடியூல்டு வகுப்பு ''சட்டசபைத் தேர்தல் பிரசார சபை ஸ்தாபிதம்'' செய்ய யோசனைக் கூட்டம் நடைபெறும்.

---

## கண்டுபிடித்து விட்டார்!

### சென்னையில் S. V. லிங்கம்


29-10-45 சென்னை வி. பி. ஹாலில் கோபதி நாராயண செட்டியார் தலைமையில் நடந்த பி. பா. ஆதரிப்புக் கூட்டத்தில் தோழர் எஸ். வி, லிங்கம் பி. பா.வை ஆதரித்துப் பேசியதோடு, பெரியாரைப் பற்றிப் பேசும்போது, ''தாசியிடம் கொடுத்த பணம் திரும்பி வந்தாலும் வரும். ஆனால் பெரியாரிடம் கொடுத்த பணம் திரும்பி வராது, அவருக்குப் பணமே பிரதானம் அவர் பேச்சைக் கேட்காதீர்கள்'' என்று குறிப்பிட்டாராம். ஆமாம் ''நமது'' எஸ். வீ. லிங்கந்தான்! அவர் பின்னால் இன்னும் சில ''நமது'' லிங்கங்கள் இருந்துதான் இவரைமுன் தள்ளி இருக்கிறார்கள்.

([illegible])

80-வருட அனுபவம்
1872ஆம் முதல் ஆங்கில மருந்து முறையும் இணைப்பு

# குரு மருந்துகள்

பர்மா, சிலோன், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலும், இந்திய வட மாகாணங்களிலும் சிறப்புற்றவை.



(CHILDREN'S HEALTH SET)

## குழந்தைகள் பாதுகாப்புக்கு

1-செட் 7-மருந்துகள்

1. குரு கோரோஜனை மாத்திரை 0-12-0
2. குரு கஸ்தூரி மாத்திரை 0-12-0
3. குரு பாலர் வயிற்றோட்ட மருந்து 0-14-0
4. குரு வேப்பெண்ணை தைலம் 1-4-0
5. குரு K. சொட்டு மருந்து (கக்குவானுக்கு) 2-0-0
6. குருஜிமாகளிம்பு(கரப்பானுக்கு) 1-0-0
7. குரு பாலர் டானிக் 2-0-0

(வி. பி. பி. பிரத்தியேகம்)

விபரங்களுக்கு:—

டாக்டர்
ஏ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்து சாலை.........
திருச்சினாப்பள்ளி (S. I.)

# அதிசயம்

## சபாஷ் காங்கரஸ்!

### காங்கரசுக்கு ஓட்டு செய்யுங்கள் ஏன்?

"மதுரை காலேஜ் வகுப்பிலிருந்து வெளியேறிய மாணவர்கள் கடையை மூடும்படி கடைக்காரர்களை வற்புறுத்தியதனால் கலகம் ஏற்பட்டது"

கலேஜ் "வகுப்புகளில் இருந்து வெளிவந்த மாணவர்களை தயவுசெய்து வகுப்புக்குப் போங்கள் அல்லது உங்கள் வீட்டிற்காவது போங்கள் என்று போலீசார் கேட்டுக்கொண்டும்" போகவில்லை.

"போலீசார்மீது கல்லெறியப்பட்டது"

"போலீஸ் பீட் ஸ்டேஷன் கொளுத்தப்பட்டது"

"போலீஸ் சட்ட இலாக்கா இன்ஸ்பெக்டர் காரியதரிசிமீது கல் எறியப்பட்டது" "ஹைஸ்கூலுக்குள் புகுந்து ஆட்சேபிக்கத்தக்க காரியங்கள் நடத்தப்பட்டன"

"தந்தி டெலிகிராப் 'டெலிபோன்' தந்திகள் அறுக்கப்பட்டன"

"மின்சார விளக்குகள் தண்ணீர்த் தொட்டிகள் அழிக்கப்பட்டன"

"மீனாட்சி, மகாலட்சுமி மில்லுகளுக்குச் சென்று எதிரே கூட்டம்கூடி மில் தொழிலாளிகளை ஸ்ட்ரைக் செய்யும்படி கேட்கப்பட்டது"

இதன் காரணமாய் மக்களை பாதுகாக்கவும் சமாதான நிலை ஏற்படுத்தவும் கூட்டத்தை கலைக்கவும் "போலீசார் கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்."

"மூவர் மாண்டனர் பலர் காயமடைந்தனர்." "முனிசிபல் லாரிகள் தீக்கிரையாயின"

இவை தேசீயப் பத்திரிகையில் காண்பவை.

காங்கரசின் வீரத்திற்கும், பிரதாபத்திற்கும் அடையாளம் வேறு என்ன வேண்டும்? ஆகையால் ஓட்டர்களே காங்கரசுக்கு ஓட்டு செய்யுங்கள்.

பொது மக்களே நாளைக்கு காங்கரஸ்காரர்கள் "இந்த சம்பவங்களுக்கும், எங்களுக்கும், (காங்கரஸ்காரர்களுக்கும்) சம்மந்தமில்லை" என்று சொல்லிவிடுவார்களோ என்பதாகச் சந்தேகப்பட்டு அதனால் "நாம் கொடுக்கும் ஓட்டு பயனில்லாமல் போய்விடுமோ—கோழைகளுக்குக் கொடுத்ததாக ஆய்விடுமோ" என்றெல்லாம் நீங்கள் சந்தேகப்படாதீர்கள்.

முன்பு ஆகஸ்டில் "தந்திக்கம்பி அறுத்ததற்கும், போலீஸ் ஸ்டேஷன், ரயில்வே ஸ்டேஷன், கச்சேரி ஆகியவைகளுக்கு நெருப்பு வைத்ததற்கும், இந்திய அதிகாரிகளைக்கொன்றதற்கும்எங்களுக்கும்(காங்கரசுக்கும்) சம்மந்தம் கிடையாது" என்று சொன்னார்கள் என்றாலும் அப்படிச் சொன்னது முட்டாள்தனம், கோழைத்தனம்,பேடித்தனம் என்று கருதி உடனே "நாங்கள்தான் செய்தோம். அதைச் செய்யாதவன், அதற்கு உதவி செய்யாதவன் அதை எதிர்த்தவன் எல்லோரும் துரோகிகளாவார்கள் அவர்களை நாங்கள் பதவிக்கு வந்தவுடன் விடப்போவதில்லை!' என்று சொல்லி இன்று ஓட்டுக் கேட்கவில்லையா?

ஆதலால் நாளைக்கு இதை "நாங்கள் செய்யவில்லை"என்று சொல்லமாட்டார் ஆதலால் உங்கள் ஓட்டுகளை வீரர்களுக்கு கொடுங்கள்.

ஒரு சமயம் காங்கரஸ்காரர்கள் இல்லை என்று சொன்னாலும் சர்க்கார் "காங்கரசார் செய்ய வில்லை" என்று சொல்லமாட்டார்கள்"காங்கரஸ்காரர்கள் செய்தார்கள், இவர்கள் தான் காரணம்" என்று நன்றாக கெட்டியாக ஆதாரத்தோடு அதுவும் ஒரு லட்சம் புஸ்தகம் போட்டு சொல்லி அவர்களுக்கு வீரப் பிரதாப பட்டம் கொடுத்து விருந்தளித்து இவர்களுக்கே உங்களை ஓட்டளிக்கும்படியாகச் செய்வார்கள்.

ஆதலால் காங்கரசுக்கு ஓட்டுச் செய்யுங்கள்.

இதுவிஷயத்தில் உங்களுக்கு ஒரு சங்கடம் ஏற்படலாம்.

அதாவது,

காங்கரஸ்காரர்கள் "கழுதையை நிறுத்தினாலும் ஓட்டுச் செய்வதா?"

என்று.

இது தீர்ந்துபோன விஷயம். இது காங்கரஸ்காரர்களால் மாத்திரம் தீர்ந்துபோன விஷயமல்ல. மற்ற கட்சியார்களாலும் கழுதையை நிறுத்தினாலும் சரி, கயவர்களை நிறுத்தினாலும் கட்சிப் போரால் நிறுத்தினால் மூச்சுப் பேச்சுக் காட்டாமல் செம்மறி ஆடுகள் போல் ஓட்டுச் செய்துவிட வேண்டும் என்பது இன்று கட்சிகளின் ஜீவாதாரக் கொள்கையாகும்.

இதை இப்போது தோழர் ராஜகோபாலாச்சாரி எதிர்க்கிறார். "தகுதி உள்ளவர்களுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்கிறார். இதற்கு ஏதாவது உள் அருத்தம் இருக்கலாம். இதெல்லாம் ஆச்சாரியாரைப் போன்ற தனிப்பட்ட பெருமையுள்ள மக்களுக்குச் சம்மந்தப்பட்டதாகும். மற்றப்படி "பாமர மடப்பசங்கள்" என்று இவர்களாலேயே சொல்லப்பட்ட சாதாரண மக்களுக்குக் "கழுதையை நிறுத்தினாலும் ஓட்டுப் போடவேண்டும்" என்பது "பகவான் கீதையில் சொன்னது போன்ற" சத்தியமாகும்.

ஆகவே சபாஷ் காங்கரஸ்! என்கிறோம். அதோடு தேசபக்த சிகாமணிகளே, தேசிய வீரர்களே காங்கரசுக்கே ஓட்டுப் போடுங்கள் பலன் அனுபவியுங்கள் என்கிறோம்.

---

## பதவி விட்டனர்!

12. திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க திருச்சி ஜில்லா லால்குடி தாலுக்கா சிறுகனூர் திராவிடர் கழகத் தலைவர் ரா. ரெங்கசாமி அவர்கள் பஞ்சாயத்து கோர்ட் மெம்பர் பதவியையும், யுத்தக் கமிட்டி மெம்பர் பதவியையும் ராஜிநாமாச் செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறார்.

13. திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க தோழர் கே. சண்முகவேலு அவர்கள் அருப்புக்கோட்டை தாலுக்கா உணவுப் பொருள் விலை நிர்ணயக் கமிட்டி உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறார்.

மலேயாவிலுள்ள ஒரு அதிகாரியிடமிருந்து கிடைத்த
7–10–45ந் தேதி கடிதத்தில் காணப்படும் குறிப்புகள்:
"வேறு எதையும் விட நமக்கு மிகவும் தேவையானது
"சௌகரியங்கள்"—மிக அவசரமாக!
இந்தத் தேவையைத்தான்
மே. த. கவர்னரின்
கஷ்ட நிவாரண சகாய நிதி
பூர்த்திசெய்ய முயற்சிக்கிறது. அதற்கு உதவி
அவசரமாக தேவை.
எனவே
"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு
"ஹானரரி டிரஷரர், மே.த. கவர்னரின் கஷ்ட நிவாரண சகாயநிதி,
C/o இம்பீரியல் பாங்க், இந்தியா" என்ற விலாசத்துக்கு
தயவு செய்து பணம் அனுப்பி உதவுங்கள்.

குடி அரசு

1945-ஆம் நவம்பர் ௴ 10-௳

# மதுரை திருவிளையாடல்கள்

## வேவல் விடை பெறுவாரா?

மதுரையில் இவ்வாரம் 6, 7-ந் தேதிகளில் மாபெரும் தேசீயத் திருவிளையாடல்கள் நடந்திருக்கின்றன. ஆகஸ்ட் நாசவேலைகளின் பிரதிபிம்பங்களே உருப்பெற்றாற்போல் நடைபெற்றிருக்கின்றன.

தந்திக் கம்பி அறுக்கப்பட்டது.

டெலிபோன் கம்பி அறுக்கப்பட்டது.

போலீஸ் ஸ்டேஷன் கொளுத்தப்பட்டது.

போலீசார் அடிக்கப்பட்டனர்.

முனிசிபல் வாகன் கொளுத்தப்பட்டது.

குடிதண்ணீர்த் தொட்டிகள் அழிக்கப்பட்டன.

அதிகாரிகள் மீது கற்கள் வீசப்பட்டன.

மற்றும்பல இடங்களில் நெருப்பு கொளுத்தப்பட்டன.

முனிசிபல் ராந்தல் கம்பங்கள் சாய்க்கப்பட்டன. பல்புகள் உடைக்கப்பட்டன.

கல்லூரி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் தடுக்கப்பட்டனர்.

ஹைஸ்கூல்களுக்குள் பலாத்காரமாய்ப் புகுந்து அடாத காரியம் செய்யப்பட்டது.

பட்டப்பகலில் மக்கள் தலைவிரித்து ஆடினர்.

ஆர்ப்பாட்டம் அட்டூழியம் மோசமாய் நடத்தப்பட்டது.

ரோட்டுகளில் வழிநடைகளில் தடங்கல்கள் செய்யப்பட்டன.

பள்ளிகள், மில்லுகள் மூடப்பட்டன.

இன்னும் என்னென்னவோ நடந்தன.

துப்பாக்கிப் பிரயோகத்தால் மூன்று (3) பேர் செத்தார்கள்

ஐம்பதுபேர் காயம்பட்டு ஆஸ்பத்திரிகளில் கிடக்கிறார்கள்''

என்பவைகளான இந்த சங்கதிகள் "அசோசியேட் பிரஸ் நியூஸ்', "நமது நிருபர் இடமிருந்து'' என்ற தலைப்புகளில் இந்து பத்திரிகை முதல் 'சு. மி.', 'தி. ம.', 'பா. தே.', 'தி. ச.' முதலிய எல்லாத் தேசீய தினசரிகளிலும் காணப்படுகின்றன.

"64 திருவிளையாடல்கள்'' நடந்த ஆலவாய் என்னும் மதுரையம் பதியில் பட்டப் பகலில் துவங்கி தொடர்ச்சியாய் இரண்டு நாட்கள் இத்திருவிளையாடல்கள் நடந்திருக்கிறன.

இன்றைய பிரிட்டிஷ் ஆட்சியில் அதுவும் "நீங்கள் செய்ததை நான் மறந்துவிட்டேன் நான் செய்ததை நீங்கள் மறந்துவிடுங்கள்'' என்று வேவல் பிரபு தேசீயத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டு இருவர் வரவு செலவு, கணக்கும் பார்த்து, பாக்கி சாக்கிகளை நேர் செய்து கணக்கை நில் பாலன்ஸ் (Nil Balance) செய்து கொண்ட பிறகு திராவிடமக்களின் பழம்பெரு நாட்டில்—மதுரையில் பழையபடி நாசவேலை வரவு செலவு துவக்கமாகி இருக்கிறது என்றால் இந்த நாசவேலை அட்டூழியம் மதுரையம்பதியோடு நிற்குமா மற்றப்பதிகளுக்கும் பரவுமா என்பது நினைக்கவே பயப்படும் காரியமாக இருக்கிறது.

இன்று வேவல் பிரபு இருக்கும் பீடத்தில் லார்ட் லின்லிங்டன் பிரபு இருந்திருந்தால் இந்தத் திருவிளையாடல்கள் நடந்திருக்கவே இருக்காது. ஆகஸ்ட் திருவிளையாடலும் நடந்திருக்காது. எனவே இந்த நாட்டில் இனியாவது இந்தப்படியான திருவிளையாடல்கள் நடக்காதிருக்க வேண்டுமானால் 1 தடவை 2 தடவை 3 தடவை சொல்லுவோம் வேவல் பிரபு இந்தியாவைவிட்டுவிடைபெற்றாகவேண்டும் என்று. இல்லாதவரைகண்டிப்பாகவேறுபல இடங்களும், வெகு பேர்களும் இந்தக் கதியை அடைந்துதான் தீரவேண்டிவரும் என்றே பொதுமக்கள் நலம் கருதி பயப்படுகிறோம்.

வேவல் பிரபு போர் வீரராக இருக்கலாம். யுத்தகாலத்தில் அவர் இந்தியாவுக்குத் தேவை இருந்திருக்கலாம். ஆனால் இந்த சமாதான காலத்தில் அவரை நிர்வாக வீரர் என்று கருதி இவ்வளவு பெரிய பொறுப்பில் வைத்தது பிரிட்டிஷாரின் அறிவு சூன்யம் அல்லது பொறுப்பற்ற தன்மை என்று சொல்லவேண்டி இருப்பதற்கு வருந்துகிறோம்.

மதுரையில் இந்தமாதிரியான காரியத்தில் பிரவேசித்த "தேசீய வீரர்களை'' நாம் சிறிதும் குற்றம் சொல்ல முனையவில்லை. ஆனால் இவர்களை இப்படிச்செய்ய உற்சாகம் ஊட்டிய வேவல் பிரபுவை வெளியாக்காமல் மூடிவைப்பது கோழைத்தனமேயாகும்.

வெள்ளையர் வெற்றிபெற்றவுடன் வேவல்பிரபு காங்கரஸ்காரர்களை விடுதலை செய்து வரவழைத்து, விருந்தளித்து, அளவளாவி, வரவு செலவு நேர் செய்துகொண்டு புது வரவு செலவு செய்ய விருப்பம் காட்டி, விண்ணப்பம் போடும்படி வெளியனுப்பியவுடனே முதல் அவர்களின் (காங்கரஸ்காரர்களின்) வீரப்பிரதாபமெல்லாம்;

"ஆகஸ்ட் நடவடிக்கைகள் எங்கள் திட்டம்தான்'' "அவை அவ்வளவுக்கும் நாங்களே பொறுப்பாளிகள்'' "அதில் சேராதவர்கள் துரோகிகள், அவர்களை மன்னிக்க மாட்டோம்'' "நாசவேலை செய்தவர்களைப் பாராட்டுகிறோம். அவர்கள் குடும்பத்திற்குப் பொருளுதவி செய்கிறோம்'' என்றும், "அடுத்த போராட்டம் இதனிலும் பெரிதாக நடக்கப்போகிறது. அந்தப் பெரிய போராட்டத்திற்கு ஆகஸ்ட் நாசவேலை ஒரு ஒத்திகையேயாகும்''

என்றும் சொல்லியே பிரசாரம் செய்து வருகிறார்கள், என்பதோடு இனியும் அவர்கள் "அது (அந்த நாசவேலை முறை) மறந்து போகாமல் இருப்பதற்கே மதுரையில் ஒரு சிறிய ஒத்திகை செய்து பார்த்தோம்'' என்று சொல்லப் போகிறார்கள். நம் நாட்டு ஓட்டர்களும், மக்களும் இந்த தேசீய சேவையைப்பார்த்தே நடுநடுங்கி "நம் ஓட்டு வீணானாலும் சரி நாம் போட்டது தேசிய வீரர்களுக்கு தெரியட்டும்'' என்று கையெழுத்தும் போட்டு ஓட்டுபோடப் போகிறார்கள். கேவலம் ஒரு கொள்ளைக்கூட்டத்தாரின் தேர்தல் பிரசாரத்திற்கு இவ்வளவு பெரிய நாசவேலையை, இந்த சர்க்கார் அனுமதித்து வருவதா என்று கேட்கிறோம்.

ரோஜா முத்தையா

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மத முள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரி விக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

இப்படியாக நடந்ததன் பயனாய் காங்கரசார் வெற்றி பெறுவதிலோ அவர்கள் பதவிக்கு வந்து ஆட்சிபுரியப் போவதிலோ இன்று நாம் தடைசொல்லவில்லை. அதற்கு முட்டுக்கட்டையாய் நிற்க விரும்பவும் இல்லை. ஆனால் மாகாணம் பூராவும் மதுரை போல் நடந்தால் என்ன செய்வது? என்பதுதான் நம் கவலை. ஆகவே நடந்தவரையிலும் எப்படியோ தொலைந்து போனாலும் இனி இப்படி நடக்காமல் இருப்பதற்கு வேவல் பிரபு வெளியேறிவிட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை என்று வலியுறுத்திக் கூறுவோம்.

நாசவேலைக்காரர்களை வெளியாக்கி காங்கரஸ் ஸ்தாபனத் தடைகளை விலக்கிக் குற்றவாளிகளுக்கெல்லாம் சலுகைகாட்டியும், காட்டிக்கொண்டும் இருக்கும் இந்த நேரத்தில் அதுவும் "ஆகஸ்ட்டுக் கலவரத்திற்குப் பொறுப்பேற்க முதல் முதல் துணிவுகொண்ட வீர சிகாமணி" நேருவுக்கு வைசிராய் பேட்டி கொடுத்து குசலம் விசாரித்த பிறகு எட்டு நாட்களுக்குள் மறுபடி ஆகஸ்ட் ஒத்திகை நடப்பதென்றால் உண்மையில் வேவல் பிரபு மாத்திரமல்லாமல் இந்த பலவீனமான வெள்ளையர் வர்க்கமே வெளியேற வேண்டியது மிகவும் நியாயமும், அவசியமும், அவசரமுமான காரியம் என்று சொல்ல வாய் துடிக்கிறது.

இந்த நாசவேலை தேசிய வீரர்கள் நாளைக்கு ஓட்டுக்குச் செல்லும்போது ஆகஸ்ட் தேசசேவை வேலையோடு நவம்பர் தேச சேவை வேலையையும் ஓட்டர்களுக்கு எடுத்துச் சொல்லித்தான் ஓட்டுக் கேட்கப் போகிறார்கள். ஓட்டர்களும் எதை உத்தேசித்தோ ஓட்டுப் போட்டுத்தான் தீருவார்கள். இப்படிப்பட்ட ஓட்டுகள் தான் ஜனநாயக ஓட்டுகளா என்று மேன்மைதங்கிய கவர்னர் ஹோப்துரைமகனாரைக் கேட்கின்றோம். இந்தத் தேர்தலில் நின்று தானா மற்றக் கட்சியாரும் வெளிவர வேண்டும்என்றுஇந்தசர்க்கார் எதிர்பார்க்கிறது? இதில் வெற்றி பெற்றவர்களைக் கொண்டா கான்ஸ்ட்டிடியூஷன் அசம்பளி—ஜனப்பிரதிநிதி சபை கூட்டி சீர்திருத்த திட்டம் வகுப்பது? என்று பிரிட்டிஷ் வெள்ளையரையும், அரசியல் அறிவுபடைத்த ஜனநாயக வாதிகளையும் கேட்கின்றோம். திருச்சி மாநாட்டின்போது அங்கிருந்த போலீஸ் அதிகாரிகளும் ஜில்லா அதிகாரியும் அனாவசியமாய் மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டும் மக்கள் அமைதியாய் நடந்துகொண்டார்கள். அப்படி இருந்தும் அந்த அதிகாரிகளை ஹோப் சர்க்கார், ஏன் என்றுகூட கவனிக்கவில்லை.

எனவே காங்கரசல்லாத மக்கள் கூட்டம் கூடி "வைசிராய் பிரபு உடனே அழைக்கப்படவேண்டும் அவருக்கு நிர்வாகத் திறமை இல்லை" என்று பார்லிமெண்டுக்குத் தந்தி அடிக்கத் தீர்மானிக்க வேண்டியதே இனி இம்மாதிரி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளத் தக்க காரியமாகும்.

---

## கிருஷ்ணன்—பாகவதர்

தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் நிலையைப்பற்றி பரிதபித்தும் அவர்களை எப்படியாவது விடுதலை செய்து வெளியில் கொண்டுவரவேண்டும் என்றும் ஏராளமான சேதிகளும், தீர்மானங்களும், தனிப்பட்ட கடிதங்களும் நமக்கு வந்தவண்ணமாக இருக்கின்றன.

இவர்கள் சம்பந்தமான வழக்கைநடத்தினவர்கள் பொதுமக்களிடம்சிறிதாவதுசம்மந்தமோ, லட்சியமோ வைத்தவர்களாக இல்லாமல் பெரிதும் பார்ப்பனர்களையே நம்பி அவர்கள் சொன்னபடியே நடந்துவந்தவர்களாக இருக்கிறார்கள். இனியும் வழக்கு சம்பந்தமான காரியங்களுக்கும் பார்ப்பனர்களையே நம்பித்தீர வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கு இவர்கள் பரிதாப நிலையைப்பற்றி கவலையும் ஆத்திரமும் இருந்தாலும் தகுந்த பொறுப்புள்ள யாரும் முன் வந்து யோசனை சொல்லி காரியம்நடத்த உதவிபுரியவும் இல்லை.

கேசின் நிலைமையையும் உண்மையையும் தெரிந்த அநேகர் ஏன்? நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பதுபேர்கூட இந்த கேசு ஒன்றும் ஆகாது என்று நினைத்து அலட்சியமாய் இருந்துவிட்டார்கள். அசல் தீர்ப்பு அவர்கள் எதிர்பார்த்ததற்கு விரோதமாய் இருந்தும் கூட அப்பீலில் அடியோடு மாறிவிடும் என்கின்ற முரட்டுத் தைரியத்துடன் மற்றவர்களுக்கும் தைரியம் சொல்லிக்கொண்டு இருந்துவிட்டார்கள்.

கடைசியாக இப்போது பெரிய தலைகளைக் கண்டு இதற்குப் பரிகாரமில்லையா என்று அழுதால், "கேசு ஒழுங்காக நடத்தப்படவில்லை" என்று 'சாக்கு'ச் சொல்லுகிறார்கள். அப்போது கேசு நன்றாக நடத்தப்படுகிறது என்று சொன்னவர்கள்கூட இப்போது கேசு சரியாய் நடத்தப்படவில்லை என்றும், மற்றும் பல மாதிரியாகவும் சொல்லுகிறார்கள்.

எப்படி இருந்தாலும் சரி இனி யாவரும் இதில் கவலை கொண்டு கட்சி பேதம், சொந்த அபிப்பிராய பேதம் இல்லாமல் இருவர் விடுதலையையும் ஒன்றுபோல் கருதி இருவர் நண்பர்களும், அனுதாபிகளும், பொது மக்களும் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டம் கூடி வழிமுறை வகுத்து கமிட்டி ஏற்படுத்தி குறைந்தது 50000 ஆயிரம் ரூபாயாவது வசூல் செய்து பண்டு சேர்த்து மேலால் காரியம் செய்ய வேண்டியது அவசியம் என்று கருதுகிறோம். மொத்த வசூல் என்பது எப்படி இருந்தாலும் 1 ரூ. பண்டு என்பதாக ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு ரூபாயாக 50ஆயிரம் பெயர்களிடம் 50 ஆயிரம் ரூபாய்கள் பொது மக்கள் ஆதரவைக் காட்ட வசூலிக்கப்படவேண்டும். இது உடனே துவக்கப்படவும் வேண்டும். அதுவும் ஒருமுகப்பட்ட முயற்சியாய் இருக்கவேண்டும். காரியம் வெற்றிகரமாய் முடியும் என்பதில் நமக்குச்சிறிதும் அய்யப்பாடு இல்லை. ஆகவே

கூடுங்கள்!
ஒன்றுபடுங்கள்!!
துவக்குங்கள்!!!
வெற்றி நிச்சயம்.

---

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

சேலம் சென்னை முதலிய இடங்களில் இருந்து 7-11-45-ந் தேதி ஈரோடு வந்தார். 11 அல்லது 12-ந் தேதி ஓய்வுக்காகக் குற்றாலம் புறப்படுவார்.

விலாசம்:
பெரியார் ஈ. வெ. ராமசாமி,
குற்றாலம்,
திருநெல்வேலி ஜில்லா.

## என்ன அதிசயம்?

இந்த வருடம் தீபாவளி கொண்டாடாதவர்கள் கையெழுத்து மாத்திரம் 5000, 6000 பேர்கள் போட்டிருக்கிறார்களே! அப்படியானால் பண்டிகை கொண்டாடாத ஆட்கள் 1000ు 20000 பேர் இருப்பார்கள்போல் தெரிகிறதே இது என்ன அதிசயம்?

### அடேயப்பா இதுதானா மகா அதிசயம் ?

ராஜகோபாலாச்சாரியாரையே கொண்டாடாதவங்களின் கையெழுத்துக்கள் லட்சம் வேணும்னாலும் கிடைக்குமே அப்படியிருக்க இந்த அன்னக்காவடி பொய்க் கதை, போக்கிரித்தனமான கதை தீபாவளி கொண்டாடாதவர்கள் கையெழுத்துத்தானா அதிசயம்.

### ஆச்சாரியார் கொண்டாட்டம்

கல்கி—சதாசிவம்—டி. கே. சிதம்பரநாத அய்யர் இல்லை இல்லை முதலியார், டாக்டர் ராஜன், எ. வைத்தியநாதய்யர், எம். பட்டாபி ராமய்யர், ஆச்சாரியாரை ஆதரித்ததற்கு ஆக அடிபட்ட கோபாலசாமி அய்யர் ஆகிய இவர்களுக்குள் அடங்கிவிட்டதே ஆச்சாரியார் கொண்டாட்டம்! அதுவும் இப்படிப்பட்ட ஒரு பெரும் புத்திசாலி, உண்மைத் தியாகி ஆகிய அவருக்கே இந்தக் கதி என்றால் இனி தீபாவளிக்கு என்ன மரியாதை இருக்கப் போகிறது?

சரி

ஆச்சாரியார் விஷயத்தில் காமராஜும் பக்தவத்சலமும் ஜெயித்துவிட்டார்களே இதுகூட அதிசயமல்லவாப்பா? இதில்தான் அதிசயமென்ன இருக்கிறது? இந்த ஜெயிப்புக்கு நேருவும், பட்டேலும் வைத்த நெருப்பே ஒழிய காமராஜர் பக்தவத்சலம் சாமர்த்தியமல்ல இது.

சரி

நாளைக்கு இது எப்படி முடியும்?

எப்படி முடியும், எப்படியும் ஆச்சாரியார் ஏதாவது ஒரு பிரைஸ் அடித்தே தீருவார்.

---

## திராவிடர் கழகத்திற்கு
(ஜஸ்டிஸ்கட்சிக்கு)

10-11-45 வரை சேர்ந்துள்ள அங்கத்தினர் 34219 பேர். சந்தா வரவு ரூ. 3405-0-0

---

## தளபதி C. N. அண்ணாதுரை M. A., சுற்றுப்பிரயாணம்

தஞ்சைமாவட்டத்தில் தளபதி சி.என். அண்ணாதுரை அவர்கள், தோழர்களான கே. கே. நீலமேகம், வி. சின்னதம்பி, எஸ். கே. சாமி ஆகியவர்களுடன் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

11-11-45 சுவாமிமலை வாசகசலை ஆண்டுவிழா.
12— மாயவரம் பொதுக்கூட்டம்.
13— பகல் 1-மணிக்கு நாகை தேசிய உயர்நிலைப்பள்ளி மாணவர் தமிழ்க் கழகம்.
13— மாலை திருவாரூர் பொதுக்கூட்டம்.
14— அய்யம்பேட்டை பொதுக் கூட்டம்.
15— காந்தை திராவிடர் கழக ஆண்டுவிழா,
15— மாலை தஞ்சையில் பொதுக்கூட்டம்.
16— கும்பகோணம் பொதுக் கூட்டம்.
17— சீர்காழி பொதுக்கூட்டம்.

(மழை பெய்தாலும் கூட்டம் நடத்துவதற்கு வசதிகள் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது)

## அண்ணாமலை நகரில்!

23-10-45 மாலை அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவரின் முயற்சியால் பெரியார் பிறந்த விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் இமயவரம்பன், இப்ராகீம், தியாகராசன், வில்லாளன், இளம்வழுதி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் நீலனும், அரவரசனும் இசையால் மகிழ்வித்தனர்.

துணைவேந்தர் தோழர் இரத்தினசாமி மேலும் 3 ஆண்டுகளுக்கு ஆட்சியிலிருப்பதற்காக மாணவர் மகிழ்ச்சியைக் காட்டிக்கொள்ள அன்னாருக்கு மாலை அணிவித்து வாழ்க பெரியார்! வாழ்க தமிழ்! வாழ்க இரத்தினசாமி!என்று முழக்கினர். இது 4-11-45-ல்!

தீபாவளியன்று பலமாணவர்கள் கறுப்புச்சட்டையணிந்து வலம் வந்தனர்.

## "பொம்மன்கி மார்!"

திருப்பரங்குன்றத்தில் கூடிய தமிழ் நாடு காங்கரஸ் தொண்டர்கள் மாநாட்டில் இராஜகோபாலாச்சாரியார் அவர்களை ஆதரிக்க முயற்சித்த தோழர் எல். என். கோபாலசாமி அய்யருக்கு அடி விழுந்ததாகவும், அவர் பணப்பையும் பேனாவும், மூக்குக்கண்ணாடியும், காந்தி கடிதமும் பறிக்கப்பட்டதாகவும் காங்கரஸ் பத்திரிகையில் 'ஊழியர் தாக்கப்பட்டார்' என்ற தலைப்பிலும் 'கோபாலசாமி அறிக்கை' என்ற கொட்டை எழுத்துத் தலைப்பிலும், சேதியும், அறிக்கையும், அ. பி. சேதியாகவே பிரசுரிக்கப்பட்டு விட்டன.

எனவே காங்கரஸ் கூட்டத்திலேயே "பொம்மன்கு மார்" தலைகாட்டி விட்டது. "பிராமணனை அடிப்பது" என்றால் அந்தப் "பாவம்" எப்படியும் அடித்தவர்களை சுற்றிக்கொண்டுதான் தீரும்.

"பாம்பை மாத்திரம் அரைகுறை அடியோடு விட்டுவிடக்கூடாது" என்பார்கள். அதுபோல் பார்ப்பனர் விரோதம் பொல்லாதது. சிதம்பரம் பிள்ளை அடைந்த கதி என்ன? வரதராஜுலு, கல்யாண சுந்தரங்கள் அடைந்த கதி என்ன?

இந்த கதிதான் தோழர்கள் காமராஜுவையும், முத்துராமலிங்கத்தையும் அடையப் போகிறது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இவர்கள் இருவரும் அவர்கள் மூவரைவிட மேம்பட்டவர்கள் அல்ல. காமராஜாவோடு இருக்கும் பார்ப்பனர்கள் அத்தனைபேரும் சரியான பார்ப்பனர்கள் என்பதை காமராஜா உணரவேண்டும். இதற்குஆக "தேசத்துரோகம்" செய்து "தேசியத்திற்கு விரோதமாய்" இருக்கவேண்டியதில்லை; ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். மேல் லோகத்தை (வடநாட்டை -வார்தாவை) ஏமாற்றிவிடலாம் என்று கருதிவிடக் கூடாது; அது இவர்களை ஏமாற்றிவிடும்.

### திருமண அழைப்பு

11-11-45 ஞாயிறு மாலை 6-மணிக்கு ஈரோடு பழைய ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள வெங்கிட்ட நாயக்கர் சத்திரத்தில் தோழர் ஆர். லூர்துசாமி அவர்களுடைய சகோதரி தோழர் ஆர். லூர்து மேரிக்கும், தோழர் எஸ். பி. வெங்கடாசலத்திற்கும் கோயமுத்தூர்ஜில்லா ரிஜிஸ்ட்டரார் அவர்களால் திருமணம் பதிவு செய்யப்படும். அவ்வமயம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சொற்பெருக்காற்றுவார்கள். இயக்கத் தோழர்கள் இதனையே அழைப்பாகக்கொள்ளவேண்டுகிறேன். [illegible]தயா.

## தீப ஒளி வருகிறது!

தீபாவளி போய்விட்டது! திராவிடமக்களின் மானத்தை, அறிவை, உணர்ச்சியை, நாகரீகத்தைப் பதம் பார்த்துவிட்டு அந்தப் பண்டிகை நகர்ந்தது. உணர்வு பெற்றவர் "ஒழிக தீபாவளி" என்றனர்! சிந்தனைக் கிடந்தராதவர் சிரித்து மகிழ்ந்தனர்! அரே, ஸ்ரீ கிருஷ்ணா! என்று அஞ்சலி செய்தனர்.

அடுத்து இதோ வந்துவிட்டது திருவண்ணாமலைத் திருநாள்! கார்த்திகை விளக்கு! மலையுச்சியிலே மகேஸ்வரனுக்கு ஜோதி கிளம்பப் போகிறது! வறுமையால் வாடும் மக்கள் வயிற்றிலே கொழுந்துவிட்டெரியும் தீயைவிட திருவண்ணாமலைத் தீ உயர்ந்ததா? ரத்தம் சிந்தி உழைத்தோம் ரட்சிப்பாரில்லையா என்று கதறும் அந்த நெஞ்சத் தீயைவிட அண்ணாமலை நெருப்பு அவ்வளவு மேலானதா?

அண்ணாமலைக்குப்பேச வாயிருந்தால், அந்தோ! அறிவிலிகளே! அதோ மக்கள் பசி, பிணி, பஞ்சத்தால் வாடுகிறார்களே, அவர்களை ஏறெடுத்தும் பாராது, அக்கினியிலே நெய், துணி முதலிய பொருள்களைக்கொட்டிப் பாழ்செய்கிறீர்களே! அறிவுடைமையா இது" என்று கேட்கும். அல்லது அந்த ஆண்டவனுக்காவது கண்ணிருந்தால் ஆலயத்தின் வாயிலில் அரோகரா என்று கூவிக்கொண்டிருக்கும் குமுறும் நெஞ்சங்களையும், நொந்த மனங்கொண்ட நொண்டிகளையும், கண்ணில்லாக் கபோதிகளையும், காப்பாற்ற எண்ணமில்லாத காட்டுமிராண்டிகளே! நெருப்பு விளையாட்டுக்கு நேரமா இது என்று கேட்டிருப்பார்! இரண்டும் இல்லை! தீபஒளித் திருவிழா நடக்கிறது! தீபாவளி கொண்டாடிய திருவடியார் இதனையும் கொண்டாடித்தான் தீர்வர்! ஆனால் அறிவுலகம் எள்ளி நகையாடுகிறது!

### மாணவர் மாநாடு

நவம்பர் 17, 18-ந் தேதிகளில் நடக்க இருந்த திருச்செங்கோடு மாணவர் மாநாடு பல காரணங்களை முன்னிட்டு 24, 25-ந் தேதிகளில் உறுதியாக நடைபெறுமென தோழர் கே. பரமசிவம் அறிவிக்கிறார்.

## தஞ்சை ஜில்லா இசைவேளாளர் 4-வது மாநாடு

சிக்கல் நாரேஷன் கொட்டகையில், நாளது 24-11-45 சனிக்கிழமை காலை 10-45 மணிக்கு நடைபெறும்.

தலைவர்: மதுரை தோழர் பி. கே. சண்முகநாதன், பி. ஏ., பி. எல்., அவர்கள்,

திறப்பாளர்: பசுமலை தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல்., அவர்கள்,

கொடியேற்றுபவர்: தஞ்சை தோழர் கே. நடராசன் பி.எ.,பி.எல்., அவர்கள்,

வரவேற்புக்கழகத் தலைவர்: தோழர் கே. என். பிச்சையப்பா அவர்கள்,

மற்றும் தோழர்கள் சி. பி. சுப்பையா, கிருஷ்ணசாமி பாரதி பி. ஏ., திராவிடர் தளபதி சி.என். அண்ணாதுரை எம். ஏ., லக்ஷ்மீரதன் பாரதி பி. எ., பி. எல்., எஸ். குஞ்சிதம் பி. எ. பி. எல்., காந்தா எம். ஏ, இன்னும் பல ஜில்லாக்களிலிருந்து பல தலைவர்களும் வருகை தருவார்கள். சமூகத்தார்கள் அனைவரும் வந்திருந்து சிறப்பித்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பிரவேசக்கட்டணம்; வரவேற்புக்கழக அங்கத்தினர் ரூ. 5. பிரதிநிதி ரூ. 2. பார்வையாளர் ரூ. 1.

25-11-45 ஞாயிறு காலை இளைஞர் மாநாடும் நடைபெறும்.

---

## கைத்தறி நெசவுத்தொழிலாளர் வேலை நிறுத்தம்

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் கைத்தறி நெசவுத்தொழிலாளர்களின் மீது சர்க்கார் சுமத்தியிருக்கும் சட்டங்களை கண்டிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு 5-11-45 முதல் வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. 6-11-45 மாலை சுமார் 300 கருப்புக் கொடிகளுடனும், "கண்ட்ரோல் ஒழிக!" என்ற ஒலியுடனும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

### மதிப்புரை

சமத்துவம்: (நாமக்கல்) தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக உழைக்கும் உயரிய வார வெளியீடு. வகுப்பு நலனுக்காக துவக்கப்படும் பத்திரிகைகள் இதுபோல் வகுப்பு நலனுக்கே பயன்படுத்தப்படவேண்டும். வகுப்பு மக்கள் பத்திரிகைக்கு சரியான ஆதரவு கொடுக்காவிட்டால் பத்திரிகைகள் வியாபார முறைக்குச் சென்றுவிட நேரிடும். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் கடமையை உணர்ந்து சமத்துவத்தை ஆதரிப்பார்களாக.

# தமிழ் மணிகள்

## கிருஷ்ணன் பாகவதர் விடுதலைக்காக நாடெங்கும் கூட்டங்கள்!

திருச்சியில் 30-10-45-ல் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் தோழர் எம். ஏ. அருணாசலம் செட்டியார் தலைமையில் நடைபெற்று தோழர் டி. பி. வேதாசலம் சொற்பொழிவாற்றினார். தோழர்கள் கிருஷ்ணன், பாகவதர் விடுதலை முயற்சியில் பங்கு பெற்றுழைக்கவேண்டுமென்றும், கருணை விண்ணப்பம் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

திருப்பத்தூரில் 6-11-45 மாலை 5 மணிக்கு திராவிடர் கழகத்தின் சார்பாக தோழர் சி ஆர். அருணாசலம் செட்டியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன், பாகவதருக்காக அப்பீல் செய்ய நிதி திரட்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

திருவாரூரில் தோழர் ம. ந. வேலாயுத பத்தர் தலைமையில் நடந்த விசுவகர்ம தொழிலாளர் கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன், பாகவதருக்காக அப்பீல் செய்ய நிதி திரட்ட முடிவு செய்து ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

பட்டுக்கோட்டையில் 4-11-45 மாலை தோழர் டி. தங்கவேல் பத்தர் இல்லத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன், பாகவதருக்காக நடத்தப்படும் விடுதலை முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று தீர்மானிக்கபட்டது.

சாக்கோட்டை சுயமரியாதை சமதர்ம சங்கச் சார்பில் நடந்த கூட்டத்தில் அங்கத்தினர்கள் எஸ். ஜி. கிருஷ்ணன், ஆர். ஆராவமுதன் ஆகியோர் மறைவுக்கு வருந்தியதோடு, தோழர்கள் கிருஷ்ணன், பாகவதர் விடுதலைக்கான முயற்சிகளில் பங்கு பெறுவதென்றும், இம்மாதிரி எல்லா சுயமரியாதைச் சங்கங்களையும், திராவிடக் கழகங்களையும் தீர்மானிக்குமாறும் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பொன்மலையில் 4-11-45-ல் தோழர் பொன்னுசாமி தலைமையில் நடந்த மருத்துவர் சங்கப் பொதுக் கூட்டத்தில் தோழர் ராமசாமியின் வாழ்க்கைத் துணைவியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டதோடு, தோழர்கள்கிருஷ்ணன், பாகவதருக்காக நடத்தப்படும் விடுதலை முயற்சியை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேறியது.

நாமகிரிப்பேட்டை விசுவகர்ம சங்கத்தில் 4-11-45-ல் நடந்த கமிட்டியில் தலை முயற்சிக்காக மத்திய போர்டு பிரசிடெண்டு தோழர் டி. என். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களையும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையும் பொது நிதி ஒன்று திரட்ட முயற்சிக்குமாறு கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கள்ளிடைக்குறிச்சியில் 4-11-45-ல் காலை 10 மணிக்கு தோழர் சிவனாச்சாரி தலைமையில் நடந்த விசுவகர்ம மகாஜன சங்கப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன், பாகவதர் அப்பீல் மனு விஷயமாக திருச்சி ஜில்லா சென்ட்ரல் கமிட்டித் தீர்மானத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேறியது.

## தோழர் கே. வி. அழகிரிசாமி

13-11-45 முதல் சேலம் மாவட்டத்தில் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்து இயக்கப் பிரச்சாரம் செய்வார். கூட்டங்கள் நடத்த விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

எம். பி. சுப்ரமணியம்,
சுயமரியாதை சங்க செயலாளர்,
செவ்வாய்ப்பேட்டை.

## தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

தீபாவளி கொண்டாடாத தோழர்களின் பெயர்கள் அச்சுக் கோர்க்கப்பட்டிருந்துங்கூட இடமின்மையால் இந்த வாரம் வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் வெளிவரும்.

---

முஸ்லிம் லீக் சகோதரர்களே!

பொதுத் தேர்தல் நிதிக்காக ஒவ்வொரு முஸ்லிம் சகோதரர்களிடமும் சென்று அவர்களால் இயன்ற பொருளுதவி அளிக்குமாறு கூறி, நம் ஒப்பற்ற தலைவர் முடிசூடா மன்னர் முகம்மதலி ஜின்னா அவர்களின் முயற்சிக்கு உதவி செய்து முஸ்லிம் லீக் வெற்றிபெற உழைக்குமாறு கேட்டுக்கொள்வதாக டாக்டர் முகம்மது இப்ராஹீம் எழுதுகிறார்

## மறைவு

காலஞ்சென்ற திருவரங்கம் பிள்ளை அவர்களின் துணைவியாரும், மறைமலை அடிகளின் செல்வியுமான தோழர் டி. நீலாம்பிகை அம்மையார் 5-11-45-ல் இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.


காசைக்கொடுத்து தேளைக் கொட்டிக்கொள்வதா?



அடா டா டா டா அப்பா யப்பா யப்பா, ஆ ஆ ஆ என்ன செய்வேன் என்னால் தாங்க முடியவில்லையே அப்பாடீ,

தலைவலியோ தாங்க முடியவில்லை, நெஞ்சை வலிக்குது, ஐயோ, முதுகைப் பிளக்குதே, வயத்தை வலிக்குதே, அப்பா வயிறும் உப்பிக்கிச்சே மூச்சுவிட முடியில்லையே, என்ன செய்வேன் அம்மா ஆ ஆ மலமும் பிரியவில்லை நீறும் இறங்கில்லையே, வயத்தைப் பிறட்டுதே, வாந்தியெடுக்க வருதே, ஐயோ மயக்கமும் வருதே என்ன செய்வேன், அம்மா அம்மா என்ன செய்வேன், எது முடியாது என்னால் தாங்க முடியில்லையே என்று படாதபாடுபட்டுத் தவித்துக் கொண்டிருக்கும்பொழுது அவருடைய தோழர் பார்த்து சொல்லுகிறார்.

அட பாவமே.........நான் அப்பவே சொன்னேனே தீபாவளி கொண்டாட வேண்டாம்னு, கேட்டீரா? தீபாவளி சார் தீபாவளி தீபாவளி மகிமையைப் பார்த்தீரா? நான் சொன்னது ஏறுச்சா காதிலே என்ன அறியாமை...

சார், சார், என்ன மயக்கமா! சார் ஒன்றும் பயப்படாதிங்கோ, என்னிடம் நமது டாக்டர் ஜெயராம் காயசுத்தி லேகியம் இருக்கிறது. அற்புதமான மருந்து. தருகிறேன் 2-டோஸ் சாப்பிடுங்க, உடனே மலம் பிரியும் நீறும் பிரியும் உங்கள் அவஸ்தை நீங்கிவிடும்.

மேற்கண்ட நோய்களுக்கு அருமருந்து

ஜெயராம் காயசுத்தி லேகியம்

இரண்டேவேளையில் குணம்

உங்கள் கையிலும் 1-டப்பி இருக்கட்டும்.

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0. V. P. P. வேறு

ஏககாலத்தில் 2-சேர் வாங்கினால் தபால்கூலி இனாம்.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடநாட்டுச் செய்திகள்

தஞ்சை ஜில்லா லேபர் ஆசிரியர் யூனியன் அமைப்புக் கூட்டம் 14-10-45-ல் தோழர் சி. சுப்பையா முதலியார் பி. ஏ., தலைமையில் நடைபெற்று கட்டாயக் கல்வி ஆதரிப்பு, சம்பள உயர்வுக் கோரிக்கை முதலிய தீர்மானங்கள் நிறைவேறின.

வடசென்னை ஜில்லா ஷெடியூல்டு பெடரேஷன் கூட்டம் பொன்னேரியில் தோழர் தங்காராஜ் தலைமையில் 21-10-45-ல் நடைபெற்றது.

வாழ்குடை திராவிடர் கழகத் தோழர் வி. டி. பச்சையப்பன் சிறிய தாயார் இயற்கை எய்தினமைக்காக தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி தலைமையில் 17-10-45-ல் புரோகிதமின்றி நீத்தார் நினைவு நடைபெற்றது. தோழர்கள் டி. கண்ணப்பா பி. ஏ., எம். தங்கவேல், வி. கிருஷ்ணமூர்த்தி, மாணிக்க கவுண்டர் ஆகியோர் பேசினர். "குடிஅரசு"க்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

காட்டுப்புத்தூர் பள்ளர் இளைஞர் சங்க சார்பில் 21-10-45ல் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்று நிர்வாகஸ்தர் தேர்தல் நிகழ்ந்தது.

காட்டுப்புத்தூர் தேவேந்திர உழவர் வாலிபர் சங்க சார்பில் 19-10-45ல் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேறின.

திருச்சிஜில்லா சுயமரியாதை சங்கக் கூட்டம் 21-10-45 மாலை 6½ மணிக்கு திருச்சி கருணாநிதி பார்க்கில் தோழர் என். சங்கரன் தலைமையில் நடைபெற்றுப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கல்வார்பட்டி இலவச படிப்பக ஆண்டு விழா 21-10-45 இரவு தோழர் என். அர்ச்சுனன் தலைமையில் சிறப்பாக நிகழ்ந்தது. தோழர்கள் மத்திரன், வீரநாசன், சிவநேசம் அடிகள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கும்பகோணம் தியாகராயர் செந்தமிழ்ப் படிப்பக கூட்டம் தோழர் கோ. நடேசன் தலைமையில் 20-10-45ல் நடைபெற்றதோடு இந்துமத தர்ம பரிபாலன சீர்திருத்த சட்ட மசோதாவை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேறியது.

சிங்கநல்லூரில் 23-10-45 ஆதிதிராவிட வாலிபர் சங்கத்தின் ஆதரவில் பூனா ஒப்பந்தக் கண்டனக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் குரூஸ் சீனிவாசன் என். சண்முக சுந்தரம், எஸ். பி. முத்தையன், எஸ். அத்தாய் ஆகியோர் பேசினர்,

முத்துப்பேட்டை ஜனசக்தி வாசகசாலையின் ஆண்டு நிறைவுக்கூட்டமும் நிர்வாகஸ்தர் தேர்தலும் 11-10-45-ல் நடைபெற்று தோழர்கள் மு. சுப்பிரமணியம், ஆர். சாமிநாதன், வை. ராமசாமி, ராமநாதன், எல். கே. வீரய்யா ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருட்காப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோயமுத்தூர் சுக்கிரவார்பேட்டையில் 14-10-45 இரவு தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த திருச்சி மாநாட்டு விளக்கத் திராவிடர் கூட்டத்தில் தோழர்கள் ஜனார்த்தனம் எம். ஏ., மு. கருணாநிதி, பல்லடம் பொன்னுசாமி ஆகியோர் பேசினர்.

காரைக்குடி முத்துப்பட்டணம் சமதர்ம விலாஸ் கட்டிடத்தில் 17-9-45-ல் தோழர் கே.வி. அழகிரிசாமி தலைமையில் சுயமரியாதை சங்கம் துவக்கப்பட்டு தோழர்கள் சனார்த்தனம், அருணாசலம், ராம. சுப்பையா, கருப்பையா, ராமசாமி, சுப்பிரமணியம், நாராயணன், வீரப்பன், விசாலாட்சி அம்மாள் ஆகியோர் பேசினர்.

இராசிபுரம் மருத்துவகுல சங்கத்தாரால் பெரியார் மாளிகையில் 18-9-45-ல் தோழர் கு. சென்னன் தலைமையில் நடந்த கூட்டத்தில் கவிஞர் பாரதிதாசன் விரிவுரையாற்றினார். மருத்துவரை மதிக்காத மேளக்காரரும், காப்பி ஹோட்டல்காரர், பிராமணர் ஆகியோர் உள்ளே வரக்கூடாதென்று மருத்துவர் கடைகளில் போர்டுகள் மாட்டப்பட்டன.

சன்னாசிநல்லூர் இளந்தமிழர் இயக்க சார்பில் தோழர் அருணாசலம் தலைமையில் 18-9-45-ல் நடந்த கூட்டத்தில் தோழர்கள் சுப்பிரமணியம், அரங்கசாமி, பொன்னுசாமி, சுப்பராயன் ஆகியோர் பேசினர்.

மதுரை நாடார் மகாஜன சங்கம் 18-வது வருடாந்திர ஜெனரல் மீட்டிங் 16-9-45-ல் நிகழ்ந்து நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மோகனூர் தேவேந்திர இளைஞர் சங்கத் தேர்தல் 29-9-45-ல் நடைபெற்று தோழர் மலையான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தூத்துக்குடி பன்னீர்செல்வம் சங்கத் தேர்தலில் தலைவர் சி. சண்முகம், செயலாளர் எஸ். குருசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சேலம் 19-9-45-ல் திருச்சி மவுலானா அப்துல் அஜீம் சாகிப் காங்கரசை விட்டு லீகில் சேர்ந்ததற்காக ஒரு பாராட்டுக் கூட்டம் பிரைமரி முஸ்லிம் லீக் சார்பில் நடந்தது.

கோபி 25-9-45-ல் நகர முஸ்லிம் லீக் ஆதரவில் தோழர் ஷரீப் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் ஜி. என். ராசு பேசினார்.

திருவாரூர் நாடார் விடுதியில் 5-10-45-ல் தோழர் டி. கே. சாமிநாத பத்தர் தலைமையில் விஸ்வ கர்ம தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டு தலைவராக வேலாயுத பத்தர். உபதலைவராக ராமலிங்க பத்தர், செயலாளர் டி. கே. எஸ். கணபதி, உதவிச்செயலாளர் கே. என். எஸ். மணி, பொருளாளராக எஸ்.டி.கே. சுப்பையா பத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கரூர் தமிழர் உணவு விடுதி திறப்பு விழா தோழர் வேலாயுதம் தலைமையில் தோழர் வித்வான் குருசாமி சொற்பொழிவுடன் 15-9-45-ல் நடைபெற்றது.

ராசிபுரம் ஓரியண்டல் தியேட்டரில் தோழர் ப. கண்ணன் எழுதிய வீர வாலி நாடகம் கவி பாரதிதாசன் நிதிக்காக சலகண்டபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரால் தளபதி அண்ணாதுரை தலைமையில் 19-9-45-ல் நடைபெற்றது.

திருநெல்வேலி அருந்ததியார் சமூக சீர்திருத்த சங்கத் திறப்புவிழா 23-9-45ல் நடைபெற்றது. தோழர் எஸ். தேவதாஸ் தலைமை வகித்தார்.

திருச்சி வரகனேரி மருத்துவர் சங்க பொதுக்கூட்டம் 15-9-45ல் நடைபெற்று பழையகோட்டை பட்டக்காரர் மறைவு குறித்தும் இந்தி எதிர்ப்பில் சிறைசென்ற தோழர் ராமசாமி தந்தை மறைவு குறித்தும் இரங்கற் தீர்மானங்கள் நிறைவேறின.

கோபி வைர விழா உயர்நிலைப்பள்ளியில் மாணவர் கழகச் சார்பில் 23-9-45 மாலை தோழர் நெடுஞ்செழியன் பேசினார்.

கடலூர் மாலுமியார்பேட்டை வன்னியர் இளைஞர் கழக 10ம் ஆண்டுவிழா தோழர் எஸ். எஸ். ராமசாமி படையாட்சி தலைமையில் நிகழ்வுற்று தோழர்கள் திராவிடமணி, அஞ்சலை அம்மாள்

தியாகராசன், துரைசாமி, கோவிந்தசாமி முதலியோர் பேசினர். வழக்கறிஞர் வெங்கடாசலம் பிள்ளை இராப்பாடசாலையை துவக்கிவைத்தார்.

o o

திண்டுக்கல் கலவைத் தொழிலாளர் சங்க ஆரம்பவிழா 30-9-45ல் தோழர் கணேசன் பி. ஏ., பி. எல்., தலைமையில் நடைபெற்று திண்டுக்கல் செயின்ட் மேரீஸ் பள்ளி இந்து ஹாஸ்டலில் மேற்படி சமூக மாணவரை சேர்க்க மறுத்ததையும், மேனாக்காரர் மேற்படியார் வீட்டில் சேவிக்க மறுப்பதையும் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேறின.

o o

காளையார் கருசல்குளம் 8-10-45-ல் பாண்டியகுல நாடார் மகாஜன சங்கம் ஆரம்பிக்கப்பட்டு மதுரை சங்கத்தின் கிளையாக்கப்பட்டது. தோழர் எசு காதன் சொற்பொழிவாற்றினார்.

o o

எடப்பாடி ஆதிதிராவிட வாலிப சங்கக் கூட்டத்தில் தோழர் ராமசாமி தலைமையில் தோழர்கள் துரைசாமி, தேவதாஸ், எசுதாஸ் பேசினர்.

o o

திருப்பத்தூரில் 7-10-45-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் சுயமரியாதைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு நிர்வாகக் குழு அமைக்கும் வரை தற்காலிகச் செயலாளராக தோழர் இராவணனை நியமிக்கப்பட்டது.

o o

குளித்தலையில் 7-10-45-ல் தோழர் பி. சதாசிவம் தலைமையில் நடந்த கூட்டத்தில் பாரதிதாசன் நிதி திரட்டுவது பற்றி யோசித்து ஆக்க வேலை துவக்கப்பட்டது.

o o

காஞ்சியில் 7-10-45-ல் தோழர் முகம்மது அலி சாகிப் தலைமையில் நடந்த லீக் கூட்டத்தில் தளபதி அண்ணாதுரை அவர்களும், மற்றும் பலரும் பேசினர்.

o o

திருச்செங்கோட்டில் 7-10-45 இரவு தோழர் [illegible] சாகிப் தலைமையில் முஸ்லிம் லீக் கூட்டம் நடைபெற்று சங்கமொன்று [illegible]ப்பட்டது.

o o

திருவளர்சோலை சுயமரியாதை இயக்கத் தோழர் டி. [illegible]சாமி 12-11-41-ல் இபந்தை [illegible] குறித்து நடந்த 4-வது ஆண்டு விழாவை குறித்து அவரது மனைவியார் [illegible]மாளால் திராவிடர் கழக வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

அறந்தாங்கியில் 13-10-45-ல் நடைபெற்ற மருத்துவ குல சங்கக் கூட்டத்தில் மேனாக்காரர் ஒழுங்குத் தொழில் நிறுத்தம் செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். தோழர் அருமைநாதன் மறைவுக்கு அனுதாபம் அறிவிக்கப்பட்டது.

o o

புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழக நிர்வாகக் கூட்டத்தில் வரவு செலவு சரி பார்க்கப்பட்டு தோழர் அரங்கசாமி தலைமையில் நடந்த தேர்தலில் தலைவராகப் பெரியண்ணன், உபதலைவராக கலிய முத்து, கூட்டுச் செயலாளர்களாக இராம கல்யாணசுந்தரம், நா. சந்தானம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

o o

லால்குடி மருத்துவர் சங்கப் பொதுக் கூட்டம் 13-10-45 தோழர் மா. பெரியண்ண வைத்தியர் தலைமையில் நடைபெற்றுப்பலர் பலர் பேசினர்.

o o

மண்டபம் கேம்பு அண்ணாதுரை பகுத்தறிவுக் கழக கூட்டம் 12-10-45ல் தோழர் காசிவேல் தலைமையில் கூடியது. தோழர்கள் அழகிரி, சுப்பையா ஆகியோர் பேசினர். கழக நிர்வாகக் கமிட்டித் தலைவர் அழகிரி, அமைச்சர்கள் சுப்பையா, அய்யா, பொருளாளர் காசிவேல் ஆகியதோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தோழர் எம். சண்முகத்தால் குடி அரசுக்கு 2 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

சாத்தூரில் "கி. ஆ. பெ. விசுவநாதம் வாசகசாலை" என்றிருந்த பெயரை மாற்றுவதென்று 14-10-45-ல் நடந்த திராவிட மாணவர் மன்ற ஆரம்ப விழாவில் முடிவு செய்யப்பட்டது. பின் மன்ற தலைவராகத் தோழர் சின்னப்பனும், காரியதரிசியாக ஜெகதீசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

தோழர் டாக்டர் பிச்சைமுத்து தலைவராகவும், தோழர் ம. ராசகோபால் காரியதரிசியாகவும், தோழர் முத்து துணைக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

திருச்சி மாநாடுகளுக்குத் தொண்டாற்றவந்த தஞ்சை திராவிடப் படையின் வரவு செலவு பார்க்கப்பட்டு மீதி ரூபாய் 2-4-0 அமைச்சர் பாலகிருஷ்ணனிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

o o

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் முயற்சியால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உருவப் படத்தை தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் 20-9-45-ல் திறந்து வைத்தார்.

o o

சேலம் அன்னதானப்பட்டி மிட்டாய்த் தொழிலாளர் சங்க ஆரம்ப விழா 24-10-45 புதன்கிழமை சேலம் சுயமரியாதைச் சங்க செயலாளர் தோழர் எம். பி. சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வை. திருநாவுக்கரசு, நடராசன், சின்னசாமி பத்தர் ஆகியோர் பேசினர்.

o o

சிவகாசியில் 28-10-45-ல் பகுத்தறிவுக் கழகம் நிறுவப்பட்டு கீழ்க்கண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. டி. ஆரோன் தலைவர், ராஜாமணி உபதலைவர், எம். ராமசாமி செயலாளர், ஆர். நடராசன் துணைச்செயலாளர், காளியப்ப நாடார் பொக்கிஷதார்.

o o

மதுரை நாடார் மகாஜன சங்கக் கவுன்சில் மீட்டிங் 28-10-45 மாலை 4 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தோழர் ராவ் சாகிப் எ. எ. ஆறுமுக நாடார் தலைமையில் நடைபெற்று 21 தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன.

o o

மதுரை திராவிடர் பயிற்சிக் குழுவின் ஆதரவில் மணல் ரோடு மைதானத்தில் 21-10-45 மாலை தோழர் பி. கணேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் ராமய்யா, மாசிலாமணி, ராசு, காவேரி, முத்து, கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

o o

பம்பாய் தாராவியில் 28-10-45-ல் மாலை தோழர் எஸ். கன்னையா தலைமையில் நடந்த தீபாவளி மறுப்புக் கூட்டத்தில் தோழர்கள் சவரிதாசன், சுப்பையா, சுந்தரவேல், பாலகிருஷ்ணன், பாலையா ஆகியவர்கள் பேசினார்கள்.

o o

சென்னை லயோலாக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் 29-10-45 மாலை 4-30 மணிக்கு "கலையும் வாழ்வும்" என்பது பற்றி வித்வான் நடேச சர்மா பி. ஓ. எல்., தலைமையில் தோழர் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) விரிவுரை நிகழ்த்தினார்.

o o

கோவை மருத்துவர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா 4-11-45 மாலை 5 மணிக்கு கோவை விக்டோரியா டவுன் ஹாலில் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் நடராசன், டாலகுரு, அப்பாவு, அய்யாசாமி, சித்தையன் ஆகியோர் பேசினர்.

o o

மணக்காலில் 29-10-45 மாலை பெரியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பெரியார் பட ஊர்வலமும் தோழர் எம். கே. இராமசாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்று தோழ கே. வி. அழகிரிசாமி பேசினார்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.